பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

# காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(07.04.2023 முதல் 11.04.2023 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 28 (04) PJN/GKMS/2023 தேதி: 06.04.2023

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (01.04.2023 முதல் 02.04.2023 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -11.04.2023 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01/04 | 02/04 | 03/04 | 04/04 | 05/04 | | நாள்-1 07/04 | நாள்-2 08/04 | நாள்-3 09/04 | நாள்-4 10/04 | நாள்-5 11/04 |
| 0 | 0 | 2.5 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 2 | 0 |
| 34 | 34 | 34 | 35 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 32 | 33 | 33 | 34 | 34 |
| 25 | 25 | 26 | 25 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 26 | 26 | 26 | 27 | 27 |
| 2 | 3 | 2 | 2 | 3 | மேக மூட்டம் | 2 | 3 | 2 | 2 | 2 |
| 56-92 | 56-86 | 66-83 | 58-90 | 58-87 | ஈரப்பதம் (%) | 50-80 | 50-80 | 50-80 | 50-80 | 50-80 |
| 6 | 6 | 5 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 8 | 10 | 10 | 8 | 10 |
| வடக்கு வட மேற்கு | வடக்கு வட மேற்கு | தெற்கு தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு தென் மேற்கு | தெற்கு தென் கிழக்கு | மேற்கு தென் மேற்கு | வட மேற்கு |

### எதிர்பார்க்கப்படும் வானிலை (07.04.2023 முதல் 11.04.2023 வரை):

- ஏப்ரல் 10 தேதியில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது.

- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 26-34 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 08-10 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

- ஏப்ரல் 09 லிருந்து 15 வரை மழை (1.39 மி.மீ) இயல்பாகவும், அதிகபட்ச வெப்பநிலை (33.23 டி.செ) இயல்பிற்கு குறைவாகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (23.17டி.செ) இயல்பாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | பருத்தியில் களையைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பயிரிதியோபக் சோடியம் (pyrithiobac sodium) 62.5 கிராம் a.i. + குயிசலோபாப் ஈதைல் (quizalofop ethyl) 50 கிராம் a.i களைக்கொல்லிகளை விதைத்த 20-25 வது நாட்களில் பயன்படுத்தவும். |
| உளுந்து | பூக்கும் தருணம் | நெற் தரிசு உளுந்து மற்றும் பச்சை பயிருக்கு 2% DAP கரைசலை அதாவது ஏக்கருக்கு 4 1/2 கிலோ DAPயை 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் இரவு ஊறவைத்து பிறகு அடுத்த நாள் தெளிந்த நீரை 190 |

| | | |
|---|---|---|
| | | லிட்டர் தண்ணீருடன் கலந்து பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் 15 நாட்கள் கழித்து மறு முறையும் காலை அல்லது மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு இலைகள் நன்கு நனையும்படி தெளிக்கவும். |
| கால்நடை | உண்ணி காய்ச்சல் | கால்நடைகளில் ஒட்டுண்ணியால் உண்ணி காய்ச்சல் நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இந்நோயைத் தடுக்க உண்ணியைக் கட்டுப்படுத்த பூட்டாக்ஸ் என்ற மருந்தை 1 லிட்டருக்கு 2 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும். மாடுகளை இம்மருந்து கொண்டு குளிப்பாட்டலாம். கால்நடைக் கொட்டகைக்கு அருகாமையிலுள்ள இடங்களிலும் இம்மருந்தினை தெளிக்கவேண்டும். |

**குறுஞ்செய்தி:** **ஏப்ரல் 10 தேதியில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை ஒத்திவைக்கலாம்.**

**முதல்வர்**